In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

| | |
|---|---|
| S.C.No. 78/2023 | Prosecution witness P.W.9 |
| Name: Palanivel Sundaram | Calling: |
| Father Name: | Religion: |
| Village: | Caste: |
| Taluk: | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 03.03.2026.

**(Accused 1 and 2 present.)**

முதல் விசாரணை :-

நான் தற்சமயம் மதுரை அரசு தானியங்கி பணிமனையில் மண்டல துணை இயக்குநராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு நான் திண்டுக்கல் அரசு தானியங்கி பணிமனையில் தானியங்கி பொறியாளராக பணியாற்றிவந்தபோது கடந்த 01.08.2022ம் தேதி TN-57-G-0697 என்ற ஈச்சர் வாகனத்தை பரிசோதனை செய்தேன். அந்த வாகனத்திற்கு கீழ்க்கண்ட சேதங்கள் ஏற்பட்டிருந்தது.

1. வாகனத்தின் பின்பக்க கண்ணாடி உடைந்திருந்தது.

2. வாகனத்தின் முன்பகுதி பம்பரின் வலது இடது பக்கங்களில் சிறிதளவு மட்டும் சேதமாகியிருந்தது.

3. காற்றுதடுப்பு கண்ணாடிகள் இரண்டும் உடைந்திருந்தது.

4. பின்பகுதி விளக்கு உடைந்திருந்தது.

மேற்படி சேதாரங்களை பார்வையிட்டு சேதமதிப்பு ரூ.28000/- என சான்று வழங்கினேன். நான் வழங்கிய சான்று அதசாஆ.4. இதுசம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை–

விபத்து நடந்து 1.1/2 மாதங்கள் கழித்து மேற்படி வாகனத்தை ஆய்வு செய்துள்ளேன் என்றால் சரிதான். 26.06.2022ம் தேதி நடந்த சம்பவத்திற்கும் 1.1/2 மாதங்கள் கழித்து காவல் நிலையத்திலிருந்து எனக்கு வரப்பெற்ற கடிதத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2026.03.03 13:40:15 +0530

Principal District Judge,
Dindigul.